MOJ/E15/REF/ISD/01/2023 2023.05.08

சகல திடீர் மரண விசாரணை அலுவலர்களுக்கும்,

**புதிய நிலையியல் நடவடிக்கைமுறை கோவைக்கு அமைய திடீர் மரண விசாரணை அலுவலர்களை இணைப்புச் செய்தல்.**

மக்களுக்கு மென்மேலும் வினைத்திறனும், விளைதிறனும் மிக்க சேவையைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கத்துடன், பிரதேச செயலாளர் பிரிவுகளை அடிப்படையாகக் கொண்டு மற்றும் தகவுதிறன்களின் அடிப்படையில் இனங்காணப்பட்ட வைத்தியசாலைகளுக்கு திடீர் மரண விசாரணை அலுவலர்களை நியமனம் செய்வதற்கும், அவர்களின் செயற்பணி மற்றும் நியமனம் செய்வதற்கான தகைமைகளை உள்ளடக்கியதாக திடீர் மரண விசாரணை அலுவலர்களுக்கு வெளியிடப்பட்டுள்ள புதிய நிலையியல் நடவடிக்கைமுறைக் கோவையின் 12 ஆம் பிரிவின் கீழ் இடைக்கால ஏற்பாடுகளின் கீழ் தற்போது சேவையாற்றி வருகின்ற திடீர் மரண விசாரணை அலுவலர்களை (நிரந்தர / தற்காலிக) புதிய அதிகாரப் பிரதேசங்களுக்கு இணைப்புச் செய்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. (புதிய நிலையியல் நடவடிக்கைமுறை www.moj.gov.lk எனும் அமைச்சின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.)

02. தற்போது சேவையில் ஈடுபட்டுள்ள சகல திடீர் மரண விசாரணை அலுவலர்களையும் புதிய முறையியலின் கீழ் இணைப்புச் செய்வதற்காக இங்கு குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப்படிவத்திற்கு அமைய www.moj.gov.lk எனும் அமைச்சின் இணையத்தளம் ஊடாக ஒன்லையின் (online) விண்ணப்பப்படிவத்தை முறையாக 2023.05.14 ஆம் திகதி அல்லது அத்திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்தல் வேண்டும். குறித்த திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. (கவனிக்குக – ஒன்லையின் முறையில் கிடைக்கும் விண்ணப்பப்படிவங்கள் மாத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும்.)

03. விண்ணப்பப்படிவங்களை பூர்த்தி செய்யும் போது தகைமைகள் பற்றி கவனமாகவும், சரியானதுமான தகவல்களை உட்புகுத்தல் வேண்டும் என்பதுடன், முறையாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்பட முடியும் என்பதால் அது பற்றிக் கவனம் செலுத்தல் வேண்டும்.

04. பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு விண்ணப்பிக்கும் போது தற்போது கடமைகளை நிறைவேற்றும் பிரிவு /வசிக்கும் கிராம அலுவலர் பிரிவு அல்லது அண்மித்த திடீர் மரண விசாரணை அலுவலர் பிரிவு / கிராம அலுவலர் பிரிவு அல்லது உரித்தான பிரதேச செயலாளர் பிரிவுக்கு முன்னுரிமை வழங்க கவனம் செலுத்தல் வேண்டும்.

05. தேசிய வைத்தியாசலை, மாகாண பொது வைத்தியசாலை, மாவட்ட பொது வைத்தியசாலை, போதனா வைத்தியசாலை ஆகிய வைத்தியசாலைகளுக்கு திடீர் மரண விசாரணை அலுவலர்களை நியமனம் செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதுடன், வைத்தியசாலைகளுக்கு விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பிக்கும் பொது நிலையியல் நடவடிக்கைமுறை கோவையில் வைத்தியசாலைகளுக்கு திடீர் மரண விசாரணை அலுவலர்களை நியமனம் செய்வதற்கான தகவுதிறன்கள் பற்றிக் கவனம் செலுத்த வேண்டும்.

06. ஒரு விண்ணப்பதாரிக்கு விருப்பத்தின் பேரில் உச்சளவாக 03 அதிகாரப் பிரதேசங்களுக்கு (வைத்தியசாலை அல்லது பிரதேச செயலாளர் பிரிவு) முன்னுரிமை அடிப்படையில் விண்ணப்பிக்க முடியும்.

07. தற்போது சேவையில் ஈடுபட்டுள்ள சகல திடீர் மரண விசாரணை அலுவலர்களும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள அறிவுரைகளுக்கு அமைய விண்ணப்பித்தல் வேண்டும் என்பதுடன், சகல விண்ணப்பதாரிகளும் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் கௌரவ நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு அமைச்சரின் அங்கீகாரத்தின் பேரில் நிர்ணயிக்கப்படுகின்ற அதிகாரப் பிரதேசங்களுக்கு (வைத்தியசாலை அல்லது பிரதேச செயலாளர் பிரிவு) ஒவ்வொரு 05 வருடங்களுக்கும் ஒரு தடவை நீடிப்பதன் அடிப்படையில் நிரந்தரமாக நியமனம் செய்யப்படுவார்கள் என்பதை தயவுடன் அறியத்தருகின்றேன்.

08. இது தொடர்பான மேலதிக விபரங்களை நீதி அமைச்சின் மறுசீரமைப்புப் பிரிவின் 0112446185 எனும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாக பெற்றுக் கொள்ள முடியும் என்பதையும் அறியத்தருகின்றேன்.

09. ஒன்லையின் விண்ணப்பப்படிவம், திடீர் மரண விசாரணை அலுவலர் நிலையியல் நடவடிக்கைமுறைக் கோவை, உத்தேச திடீர் மரண விசாரணை அலுவலர் பிரிவுகளுக்கு (பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் அங்கீகரிக்கப்பட்ட வைத்தியசாலைகள்) ஏற்புடைய தொடர் இலக்கங்களை பின்வரும் QR குறியீட்டின் மூலம் தரவிறக்கம் செய்துகொள்ள முடியும்.

கையொப்பம் / கிஷாந்தி மீகஹபொல,

மேலதிக செயலாளர் (மறுசீரமைப்பு),

நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளருக்குப் பதிலாக.